### திருவரங்கம் – கடியாக்குறிச்சி கிராமத்தில்

# சாலை விபத்தில் வருவாய் கோட்டாட்சியர் உயிரிழப்பு!

## குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் – நிதி உதவி அறிவிப்பு!

சென்னை,ஜூன்.21–

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கரூர் – திருச்சி தேசிய நெடுஞ்சாலை, கடியாக்குறிச்சி கிராமம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த முசிறி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஆரமுத தேவசேனா அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேக்குடி கிராமம், கரூர் – திருச்சி தேசிய நெடுஞ்சாலை, கடியாக்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகில் முசிறி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஆரமுத தேவசேனா நேற்று முன்தினம் (19.06.2025) காலை 11.45 மணியளவில் TN 45 G 1798 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது, எதிரே திருச்சியிலிருந்து திருப்பூர் நோக்கி சென்றுகொண்டிருந்த அரசுப்பேருந்து மோதியதில் முசிறி வருவாய் கோட்டாட்சியரின் நான்குசக்கர வாகனம் நிலைதடுமாறி அருகில் பழுது பார்ப்பதற்காக நின்று கொண்டிருந்த ஜேசிபி வாகனம் மீது எதிர்பாதாராதவிதமாக மோதி விபத்துக்குள்ளானதில் முசிறி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஆரமுத தேவசேனா அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையுமடைந்தேன்.

முசிறி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. ஆரமுத தேவசேனா அவர்களின் உயிரிழப்பு வருவாய்த் துறைக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

திருமதி.ஆரமுத தேவசேனா அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி.ஆரமுத தேவசேனா அவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு அண்மையில் அறிவித்த அரசு அலுவலர்களுக்கான காப்பீட்டுத் தொகை ரூபாய் ஒரு கோடி பெற்று வழங்கப்படும். மேலும், அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### விருதுநகர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தனுஷ் எம்.குமார் அறிவிப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், தமிழர் நலன் காத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன்படி விருதுநகர் தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம்/ நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | | திருவில்லிபுத்தூர் நகரம் | சர்ச் அருகில் | முகவை ராமர்<br>நெல்லை ரவி |
| 2 | | திருவில்லிபுத்தூர் ஒன்றியம் | காமராஜர் சிலை அருகில் | முகவை ராமர்<br>நெல்லை ரவி |
| 3 | 21.06.2025 | மம்சாபுரம் பேரூர் | செட்டியார் திருமண மஹால் அருகில் | முகவை ராமர்<br>நெல்லை ரவி |
| 4 | | சாத்தூர் மேற்கு ஒன்றியம் | மேட்டுப்பட்டி | எஸ்.எம்.தமிழ்ப்பிரியன்<br>மு.ராமச்சந்திரன் |
| 5 | | சாத்தூர் நகரம் | சாத்தூர் | எஸ்.எம்.தமிழ்ப்பிரியன்<br>மு.ராமச்சந்திரன் |
| 6 | | வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் | கலையரங்கம் | முகவை ராமர்<br>நெல்லை ரவி |
| 7 | 22.06.2025 | வத்திராயிருப்பு பேரூர் | வ.புதுப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் | முகவை ராமர்<br>நெல்லை ரவி |
| 8 | | எஸ்.கொடிக்குளம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | முகவை ராமர்<br>நெல்லை ரவி |
| 9 | | சுந்தரபாண்டியபுரம் பேரூர் | வ.புதுப்பட்டி பிரதான சாலை | முகவை ராமர்<br>நெல்லை ரவி |
| 10 | 23.06.2025 | இராஜபாளையம் வடக்கு நகரம் | கீழ ஆவாரம்பட்டி பாரதியார் தெரு, மூன்று முக்கு | சேலம் சுஜாதா<br>ஹ.ஹம்மத் நிஸ்ரின் |
| 11 | | இராஜபாளையம் தெற்கு நகரம் | ஜவஹர் மைதானம் பின்புறம் | சேலம் சுஜாதா<br>ஹ.ஹம்மத் நிஸ்ரின் |
| 12 | | வ.புதுப்பட்டி பேரூர் | பேரூர் அலுவலகம் அருகில், வ.புதுப்பட்டி | முகவை ராமர்<br>நெல்லை ரவி |
| 13 | | வெம்பக்கோட்டை கிழக்கு ஒன்றியம் | வெம்பக்கோட்டை | எஸ்.எம்.தமிழ்பிரியன்<br>மு.ராமச்சந்திரன் |
| 14 | | இராஜபாளையம் மேற்கு ஒன்றியம் | முகவூர் பஞ்சாயத்து அலுவலகம் முன்பு | சேலம் சுஜாதா<br>கு.விஜயகுமார் |
| 15 | 24.06.2025 | சேத்தூர் பேரூராட்சி | சந்தைக் கடை முன்பு | சேலம் சுஜாதா<br>கு.விஜயகுமார் |
| 16 | | செட்டியார்பட்டி பேரூராட்சி | அரசரடி செட்டியார்பட்டி | சேலம் சுஜாதா<br>கு.விஜயகுமார் |
| 17 | | வெம்பக்கோட்டை மேற்கு ஒன்றியம் | மேட்டுப்பட்டி | எஸ்.எம்.தமிழ்ப்பிரியன்<br>மு.ராமச்சந்திரன் |
| 18 | | சாத்தூர் கிழக்கு ஒன்றியம் | நென்மேலி | எஸ்.எம்.தமிழ்ப்பிரியன்<br>மு.ராமச்சந்திரன் |
| 19 | | இராஜபாளையம் கிழக்கு ஒன்றியம் | சத்திரப்பட்டி | எஸ்.எம்.தமிழ்ப்பிரியன்<br>ரா.ரேவதி |
| 20 | 25.06.2025 | அருப்புக்கோட்டை வடக்கு ஒன்றியம் | குல்லூர் சந்தை | போடி காமராஜ்<br>மு.ராமச்சந்திரன் |
| 21 | | விருதுநகர் கிழக்கு ஒன்றியம் | அப்பநாயக்கர்பட்டி | போடி காமராஜ்<br>மு.ராமச்சந்திரன் |
| 22 | | இராஜபாளையம் தெற்கு ஒன்றியம் | முறம்பு | எஸ்.எம்.தமிழ்ப்பிரியன்<br>ரா.ரேவதி |
| 23 | 26.06.2025 | அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம் | பந்தல்குடி | போடி காமராஜ்<br>மு.ராமச்சந்திரன் |
| 24 | | அருப்புக்கோட்டை நகரம் | புதிய பேருந்து நிலையம் அருகில் | சரவெடி சரத்பாலா<br>மு.ராமச்சந்திரன் |

விருதுநகர்

நாள் : 19-06-2025







## தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருநெல்வேலி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.ஜான்ரபிந்தர் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம்/ நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 04.07.2025 | அம்பாசமுத்திரம் ஒன்றியம் | அடையக்கருங்குளம் | பரணி ஆர்.சேகர்<br>அம்பை ராமையா<br>ச.செல்வஜெயந்தி |
| 2 | 05.07.2025 | பாளை வடக்கு ஒன்றியம் | கீழநத்தம் | நெல்லை ரவி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 3 | 06.07.2025 | வள்ளியூர் வடக்கு ஒன்றியம் | துலுக்கர்பட்டி | சி.பா.இராவணன்<br>அ.மெ.சகாய பெபிலா |
| 4 | 11.07.2025 | கல்லிடைக்குறிச்சி பேரூர் | தேரடி தெரு | கல்லிடை பேச்சி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 5 | 12.07.2025 | திருக்குறுங்குடி பேரூர் | போலீஸ் ஸ்டேஷன் அருகில் | நெல்லை ரவி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 6 | 13.07.2025 | பணகுடி பேரூர் | கோரி குடியிருப்பு | நெல்லை முத்தையா<br>அ.மெ.சகாய பெபிலா |
| 7 | 18.07.2025 | அம்பாசமுத்திரம் நகரம் | மேலப்பாளையம் தெரு | அம்பை அமானுல்லா<br>செல்வ ஜெயந்தி |
| 8 | 19.07.2025 | களக்காடு நகரம் | புதுத்தெரு, களக்காடு. | நெல்லை முத்தையா<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 9 | 20.07.2025 | விக்கிரமசிங்கபுரம் நகரம் | முன்றுலம்பு | நெல்லை மணி<br>கந்தபரமேஸ்வரன் |
| 10 | 25.07.2025 | சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றியம் | வெங்கட்ரெங்கபுரம் | பரணி ஆர்.சேகர்<br>செல்வ ஜெயந்தி |
| 11 | 26.07.2025 | நாங்குநேரி கிழக்கு ஒன்றியம் | முனைஞ்சிப்பட்டி | சி.பா.இராவணன்<br>அ.மெ.சகாய பெபிலா |
| 12 | 27.07.2025 | வள்ளியூர் தெற்கு ஒன்றியம் | காவல்கிணறு | உடன்குடி தனபால்<br>அ.மெ.சகாய பெபிலா |
| 13 | 01.08.2025 | வீரவநல்லூர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், வீரவநல்லூர். | நெல்லை மணி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 14 | 02.08.2025 | ஏர்வாடி பேரூர் | பேருந்து திருப்பம் அருகில், ஏர்வாடி. | சி.பா.இராவணன்<br>கந்தபரமேஸ்வரன் |
| 15 | | மூலைக்கரைபட்டி பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | நெல்லை ரவி<br>அ.மெ.சகாய பெபிலா |
| 16 | 08.08.2025 | இராதாபுரம் மேற்கு ஒன்றியம் | சமூகரெங்கபுரம் | உடன்குடி தனபால்<br>அ.மெ.சகாய பெபிலா |
| 17 | 09.08.2025 | நாங்குநேரி மேற்கு ஒன்றியம் | தளபதிசமுத்திரம் | கடையநல்லூர் இஸ்மாயில்<br>அ.மெ.சகாய பெபிலா |
| 18 | 10.08.2025 | சேரன்மகாதேவி மேற்கு ஒன்றியம் | பொட்டல் | கல்லிடை பேச்சி<br>ச.செல்வஜெயந்தி |
| 19 | 15.08.2025 | பாளையங்கோட்டை தெற்கு ஒன்றியம் | தருவை | நெல்லை மணி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 20 | 16.08.2025 | மேலச்செவல் பேரூர் | மேலச்செவல் கார்னர் | அம்பை அமானுல்லா<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 21 | 17.08.2025 | இராதாபுரம் கிழக்கு ஒன்றியம் | கோட்டைக்கருங்குளம் | நெல்லை ரவி<br>அ.மெ.சகாய பெபிலா |
| 22 | 22.08.2025 | களக்காடு வடக்கு ஒன்றியம் | மேலதேவநல்லூர் | பொ கந்தபரமேஸ்வரன்<br>நெல்லை மணி |
| 23 | 23.08.2025 | மணிமுத்தாறு பேரூர் | தங்கம்மன் கோவில் அருகில் | ச.செல்வஜெயந்தி<br>பரணி ஆர்.சேகர் |
| 24 | 24.08.2025 | வள்ளியூர் பேரூர் | ஆலடி பிள்ளையார் கோவில் அருகில், வள்ளியூர். | நெல்லை ரவி<br>அ.மெ.சகாய பெபிலா |
| 25 | 29.08.2025 | களக்காடு தெற்கு ஒன்றியம் | சந்தனமாரி அம்மன்கோவில் தெரு, கோதைச்சேரி. | சி.பா.இராவணன்<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 26 | 30.08.2025 | பத்தமடை பேரூர் | ராஜா ஹோட்டல் முன்பு | நெல்லை மணி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 27 | 31.08.2025 | சேரன்மகாதேவி பேரூர் | பேருந்து நிலையம் அருகில், சேரன்மகாதேவி. | பரணி ஆர்.சேகர்<br>ச.செல்வஜெயந்தி |
| 28 | 05.09.2025 | கோபாலசமுத்திரம் பேரூர் | கோபாலசமுத்திரம் பஜார் | நெல்லை மணி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 29 | 06.09.2025 | நாங்குநேரி பேரூர் | உச்சிமாகாளி அம்மன் கோவில் அருகில் | சி.பா.இராவணன்<br>அ.மெ.சகாய பெபிலா |
| 30 | 07.09.2025 | திசையன்விளை பேரூர் | உடன்குடி பிரதான சாலை | உடன்குடி தனபால்<br>அ.மெ.சகாய பெபிலா |
| 31 | 13.09.2025 | பாளையங்கோட்டை மத்திய ஒன்றியம் | அரியகுளம் | சி.பா.இராவணன்<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 32 | 14.09.2025 | இராதாபுரம் தெற்கு | இடிந்தகரை | உடன்குடி தனபால்<br>அ.மெ.சகாய பெபிலா |

திருநெல்வேலி

நாள் : 19-06-2025

கலைஞர் 100 1924 - 2023

